முருகப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.10.2021, ஞாயிற்றுக்கிழமை

1. யுகம் மாற்றம் செய்யவந்த
உயர் ஞானியே அரங்கா
வகையான உன் தருமமே
வையகம் காக்கும் எனக் கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ தரிவை திங்கள்
தெரிவிக்க மூவையீர் திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 17ம் நாள், 03.10.2021 ஞாயிற்றுக்கிழமை)
தேசிகன் கேட்க பத்ரகிரியார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மைநெறி காட்டும் குருவரங்கன்
ஞானவழி உலகமக்களெல்லாம்
நம்பிக்கை வைத்தாலே போதுமப்பா
4. அப்பனே அவரவர்க்கு உள்ளும்
அரங்கன் மகா சக்தி
ஒப்பு கொண்டு வந்து நிரம்பி
ஓங்கார பிரம்மம் அறியவே
5. அறியவே வகை செய்யுமப்பா
அறிவை தெளிவு செய்து
மரிக்கும் தன்மை ஏனென்று
மனதால் சிந்திக்க வகை செய்து
6. செய்துமே மரணம் வெல்லும் மார்க்கம்
செகத்தில் உள்ளது என தேடும்
அய்யமிலா நோக்கம் பெருகி
அதற்கு குருவருளே முதன்மை எனும்
7. எனும் திடநிலை பெருகி
எண்ணம் வழி அரங்க ஞானி
ஞானம் கலந்து சரணாகதி
ஞானவழி முழுமை அடைந்து
8. அடைந்துமே பிரணவக்குடிலின்
அடியவர்களாகி இணைந்திட
தடையின்றி ஞானிகள் காட்டும்
தரும வழிதனில் வந்திடவே

9. வந்திடவே உலக மக்களுக்கு
வசமாகும் மரணமிலாப் பெருவாழ்வு
தந்திடும் கரமாக மனிதனிடம்
தயவான சக்தி பெருகிடவே

10. பெருகிடவே வினை என்பதில்லா
பிரபஞ்சத்தில் ஞான வானாக
ஆறுமுகன் தேர்வு செய்கின்ற
அரங்கமகான் வழி ஞானிகளாகி

11. ஆகியே உலகோர் சிறப்பர்
அற்புதம் தனை படைத்து
அகிலமதில் பெருமாற்றம் புரிவர்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–